செய்தி வெளியீடு எண்: 754 நாள்:14.12.2012

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் 13.12.2012 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் உள்ள அரசு கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் கற்கும் திறன் மற்றும் புரிந்து கொள்ளும் ஆற்றலை அதிகரிக்கவும், பேராசிரியர்களது கற்பிக்கும் திறனை மேம்படுத்திடவும் மாணவர்களையும் பேராசிரியர்களையும் புகழ் பெற்ற அயல்நாட்டு பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி கல்வி கற்கச் செய்யவும் ஒருங்கிணைந்த சிறப்புப் பயிற்சி மற்றும் கூட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளவும், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்திற்கும் தென்னிந்திய பிரிட்டீஷ் கவுன்சிலுக்கும் (South India British Council) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இது போன்று அரசு கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியரை அரசு செலவில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் ஒரு பருவம் பயில அனுப்புவது இந்தியாவிலேயே முதன்முறையாக செயல்படுத்தப்படும் முன்னோடி திட்டமாகும்.

உலகத்தரம் வாய்ந்த சிறந்த உயர்கல்வியினை அனைத்து மாணவ, மாணவியரும் குறிப்பாக அரசு கல்லூரிகளில் பயிலும், பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவ, மாணவியரும் பெற வேண்டும் என்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் விருப்பமாகும். தமிழகத்தில் உள்ள அரசு கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் திறன் மேம்பாடு உடையவர்களாக திகழ வேண்டும் என்பது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வை திட்டத்தின் ஒரு அம்சமாகும். இதன் அடிப்படையில் மாணவர்களின் கற்கும் திறன் மற்றும் புரிந்து கொள்ளும் ஆற்றல், பேராசிரியர்களின் கற்பிக்கும் திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு மாணவர்களையும், பேராசிரியர்களையும் அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி கல்வி கற்கச் செய்யவும், ஒருங்கிணைந்த சிறப்புப் பயிற்சி மற்றும் கூட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளவும், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் மற்றும் மிகச்சிறந்த அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துகொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக, 2013–ம் ஆண்டு முதல் 25 மாணவர்கள் மற்றும் 5 பேராசிரியர்கள் அயல்நாடு சென்று கல்வி கற்கவும் பயிற்சி மேற்கொள்ளவும் பிரிட்டீஷ் கவுன்சிலுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, ஒவ்வொரு மாணவருக்கும் பேராசிரியருக்கும் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் மூலம் 15 லட்சம் ரூபாய் அனுமதித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்தத் திட்டத்தின் கீழ், முதல் வருடம் முதுகலை பயிலும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இரண்டாம் வருடத்தின் மூன்றாவது பருவத்தை அயல்நாட்டில் உள்ள புகழ் பெற்ற பல்கலைக்கழகங்களில் படிப்பதற்கும், அதே

பருவத்திலேயே பேராசிரியர்களும் உரிய பயிற்சி மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்பான உயர்கல்வியை வழங்குவதன் மூலம் மாணவர்களின் கல்வி அறிவு பெரிதும் மேம்பட்டு அவர்களது எதிர்கால வாழ்வு சிறப்பாக அமைய வழிவகை ஏற்படும்.

இதனடிப்படையில், தமிழகத்தில் உள்ள அரசு கல்லூரிகளில் பயிலும் மாணவர்களையும், பேராசிரியர்களையும் அயல்நாட்டு பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி கல்வி கற்க செய்யவும், ஒருங்கிணைந்த சிறப்புப் பயிற்சி மற்றும் கூட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளவும், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்திற்கும் தென்னிந்திய பிரிட்டீஷ் கவுன்சிலுக்கும் இடையே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் 13.12.2012 அன்று தலைமைச் செயலகத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற துணைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் சிந்தியா பாண்டியன் அவர்களும், தென்னிந்திய பிரிட்டீஷ் கவுன்சில் சார்பில் அதன் இயக்குநர் திரு. பால் செல்லர்ஸ் (Director, South India British Council – Thiru Paul Sellers) அவர்களும் கையெழுத்திட்டனர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நிதியமைச்சர், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளர், சென்னையிலுள்ள இங்கிலாந்து நாட்டின் துணைத் தூதரக அதிகாரி திரு.மைக் நித்தாவ்ரியானகிஸ் (British Deputy High Commissioner, Chennai – Thiru Mike Nithavrianakis), சென்னை பிரிட்டீஷ் கவுன்சில் டிவிஷன் அலுவலர் திரு. எல். தனசேகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 14.12.2012